ISBN:978-81-687049-4-7

108

செந்தமிழறிஞர்கள்

அழ வள்ளியப்பா





பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்


NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/144-%E0%AE%85%E0%AE%B4%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE_1922

செந்தமிழ்சிற்பிகள்

அழ.வள்ளியப்பா (1922 - 1989)



அறிமுகம்

அழ. வள்ளியப்பா (நவம்பர் 7, 1922- மார்ச் 16, 1989) குழந்தை இலக்கியங்கள் படைத்த மிக முக்கியமான கவிஞர். 2,000 க்கும் மேலான குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் வள்ளியப்பன். ஐந்தாம் வயதில் தான் பிறந்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் வாழ்ந்த அழகப்பன் என்பவருக்குத் தத்துப்பிள்ளையாகச் சென்றார். இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீசுவரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

பாராட்டும் விருதும்

- 1963 ஆம் ஆண்டில் இலக்னோ நடைபெற்ற அகில இந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் பதக்கமும் பாராட்டிதழும் வழங்கப்பட்டன.
- குழந்தைகள் இலக்கிய முன்னோடி, பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல் என்று சில அமைப்புகள் பாராட்டி போற்றியுள்ளனர்.
- 1982 - மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினால் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்று விருதளிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்.
- 1982ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்விக்குழுவில் வாழ்நாள் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.
- 1970 நவம்பர் 22ஆம் நாள் "குழந்தைக்கவிஞர் இலக்கியப்பணி" வெள்ளிவிழா சென்னையில் நடைபெற்றது.
- பூவண்ணன் தலைமையில் இயங்கிய பாலர் பண்பாட்டுக்கழகம் 1980 ஆம் ஆண்டில் 'வள்ளியப்பா வானொலி-தொலைக்காட்சிச் சிறுவர் சங்கம்' என்னும் பிரிவைத் தொடங்கியது.
- 'பிள்ளைக்கவியரசு' என்னும் பட்டத்தை சென்னை பாரதி இளைஞர் சங்கம் வழங்கியது.
- 'மழலைக்கவிச்செம்மல்' என்னும் பட்டத்தை காரைக்குடி சர்வதேசக் குழந்தைகள் ஆண்டுவிழாக்குழு வழங்கியது.

அழ. வள்ளியப்பாவின் வாழ்க்கை வரலாற்றை அவரது மணிவிழா ஆண்டில் "குழந்தைக்கவிஞர் வள்ளியப்பா (வாழ்க்கை வரலாறு) என்னும் நூலை முனைவர் பூவண்ணன் எழுதினார். அதனை 1982 நவம்பரில் வானதி பதிப்பகம் வெளியிட்டது.

(😊)(😊)(😊) ௐௐௐௐௐௐௐௐ (😊)(😊)(😊)

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

அழ.வள்ளியப்பா

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%85%E0%AE%B4-%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE/

அழ. வள்ளியப்பா (நவம்பர் 7, 1922- மார்ச் 16, 1989) குழந்தை இலக்கியங்கள் படைத்த மிக முக்கியமான கவிஞர். 2,000 க்கும் மேலான குழந்தைகளுக்கான பாடல்கள் எழுதியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் வள்ளியப்பன். ஐந்தாம் வயதில் தான் பிறந்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் வாழ்ந்த அழகப்பன் என்பவருக்குத் தத்துப்பிள்ளையாகச் சென்றார். [1] இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீசுவரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

எழுத்துப் பணி தொடக்கம்



தொடர்ந்து படிக்க முடியாததால் 1940 ஆம் ஆண்டில் வாழ்வாதாரம் தேடி வை. கோவிந்தனின் சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார். அப்போது சக்தி ஆசிரியராக இருந்த தி. தி. ஜ. ரங்கநாதனின் ஊக்குவிப்பின் காரணமாக சக்தி இதழிலேயே எழுத ஆரம்பித்தார். “ஆளுக்குப் பாதி” என்னும் தம் முதல் கதையை எழுதினார்.

சக்தியில் பணியாற்றிய போது வள்ளியம்மை என்பாரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகனும், நான்கு மகள்களும் உள்ளனர்.

1941 -ல் சக்தியில் இருந்து விலகி இந்தியன் வங்கியில் சேர்ந்தார். வங்கிப் பணியிலிருந்தவாறு கவிதையும் கட்டுரையும் எழுதத் தொடங்கியவர் 1982 -நவம்பரில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை எழுதினார். ஓய்வுக்குப் பின்பும் எழுதிக் கொண்டுதான் இருந்தார். செய்தித்தாள் ஆசிரியர்

வங்கிப் பணியில் இருக்கும்போதே பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய செய்தித் தாள்களுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார். 1951 முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழுக்கும், ஓய்வு பெற்ற பின் 1983 முதல் 1987 வரை, கல்கி வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராக இருந்தார்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 1950 -ல் குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். சக்தி வை.கோவிந்தன் இச்சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இந்த அமைப்பின் காரியதரிசியாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் பல பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டார். காரைக்குடி குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவராகப் பொறுப்புவகித்தார்.

அழ. வள்ளியப்பா 11 பாடல் தொகுதிகள், 12 புதினங்கள், 9 கட்டுரை நூல்கள், 1 நாடகம், 1 ஆய்வு நூல், 2 மொழிபெயர்ப்பு நூல்கள், 1 தொகுப்பு நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். இவற்றில், 2 நூல்கள் இந்திய நடுவண் அரசின் பரிசும், 6 நூல்கள் தமிழக அரசின் பரிசும் பெற்றன.

பாராட்டும் விருதும்

1963 ஆம் ஆண்டில் இலக்னோ நடைபெற்ற அகில இந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் பதக்கமும் பாராட்டிதழும் வழங்கப்பட்டன.

குழந்தைகள் இலக்கிய முன்னோடி, பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல் என்று சில அமைப்புகள் பாராட்டி போற்றியுள்ளனர்.

1982 -ல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினால் “தமிழ்ப் பேரவைச் செம்மல்” என்று விருதளிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்.

1982ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்விக்குழுவில் வாழ்நாள் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

1970 நவம்பர் 22ஆம் நாள் “குழந்தைக்கவிஞர் இலக்கியப்பணி” வெள்ளிவிழா சென்னையில் நடைபெற்றது.

பூவண்ணன் தலைமையில் இயங்கிய பாலர் பண்பாட்டுக்கழகம் 1980ஆம் ஆண்டில் ‘வள்ளியப்பா வானொலி-தொலைக்காட்சிச் சிறுவர் சங்கம்’ என்னும் பிரிவைத் தொடங்கியது. ‘பிள்ளைக்கவியரசு’ என்னும் பட்டத்தை சென்னை பாரதி இளைஞர் சங்கம் வழங்கியது. ‘மழலைக்கவிச்செம்மல்’ என்னும் பட்டத்தை காரைக்குடி சர்வதேசக் குழந்தைகள் ஆண்டுவிழாக்குழு வழங்கியது.

அழ.வள்ளியப்பா நூற்றாண்டு விழா | குழந்தைகள் சான்றோராக வளர குழந்தை இலக்கியங்களை வாசிக்க வேண்டும்: ஆட்சியர் அறிவுறுத்தல்

https://www.hindutamil.in/news/vetrikodi/news/908458-valliappa-centenary-celebration.html



புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது.

புதுக்கோட்டை வாசகர் பேரவை மற்றும் புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகியன இணைந்து நடத்திய இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு, அழ.வள்ளியப்பாவின் படத்தைத் திறந்துவைத்து, நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டார். தொடர்ந்து, நூற்றாண்டு விழாவையொட்டி

நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளைப் பாராட்டி ஆட்சியர் பேசியது:

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா எழுதிய புத்தகங்களை படிக்கத் தொடங்கினால் அதில் உள்ள வீச்சு, வேறெந்த கவிஞரின் எழுத்து நடையிலும் இல்லை என்பது புரியும். முக்கியமாக தனது கதைகளில் சமூகத்துக்குத் தேவையான கருத்துகளையும் அவர் வெளிப்படுத்தினார்.

குழந்தைப் பருவத்தில் இதுபோன்ற கதைகளைப் படிப்பதன் மூலம் சரளமாக, எவ்வித தயக்கமுமின்றி மேடை பேச்சில் ஒளிர்ந்தவர்கள் பலருண்டு. ஆனால், இன்று குழந்தை இலக்கிய கவிஞர்கள் குறைந்துவிட்டனர். எனவே, பெற்றோர் அனைவரும் தங்களது குழந்தைகளை அதிகஅளவில் குழந்தைப் பருவ புத்தகங்களைப் படிக்க வைக்க வேண்டும். அத்தகைய குழந்தைகள்தான் பிற்காலத்தில் சான்றோர்களாக வர முடியும். அதேவேளையில், குழந்தை இலக்கியத்தையும், குழந்தை இலக்கியக் கவிஞர்களையும் ஊக்குவிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றார்.

விழாவில் அழ.வள்ளியப்பாவின் மகளும், சாகித்ய புரஸ்கார் விருதாளருமான தேவி நாச்சியப்பன் ஏற்புரை வழங்கினார். புதுக்கோட்டை கோட்டாட்சியர் முருகேசன், கவிஞர் தங்கம் மூர்த்தி, வட்டாட்சியர் விஜயலட்சுமி, வாசகர் பேரவைச் செயலாளர் எஸ்.விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பவள விழா ஆண்டு

https://www.hindutamil.in/news/opinion/columns/1357955-children-writers-associations-coral-festival-year.html

1950 ஆம் ஆண்டு இந்திய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டு. ஆம், அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு, உலக அரங்கில் குடியரசு நாடாக தன்னைப் பறைசாற்றிக் கொண்டது. அதே ஆண்டு இன்னொரு வகையில் உலக இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டாக அமைந்தது. 1950, ஏப்ரல் 15 ஆம் நாள் அத்தகைய சிறப்பிற்கு காரணமாக இருந்தது.

குழந்தை இலக்கியத்தின் அடையாளமாகத் திகழ்ந்து வருகிற அழ.வள்ளியப்பா சென்னையில், பதிப்புத்துறை வித்தகரும் தனது நண்பருமான பழனியப்பாவின் வீட்டில் ஏப்ரல் 15 அன்று ஒரு முக்கியமான சந்திப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த வீடு தான் குழந்தைப் பதிப்பக அலுவலகமாகவும் அப்போது செயல்பட்டது. எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், சிறார் இதழ்களின் ஆசிரியர்கள், பதிப்பாளர்கள் என குழந்தை இலக்கியச் செழுமைக்கு வித்திடுகிற அனைத்து தரப்பிற்குமான அழைப்பு அது.

இன்று அன்று | 1989 மார்ச் 16: குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா மறைந்த தினம்

https://www.hindutamil.in/news/blogs/36471-1989-16.html

நத்தையம்மா நத்தையம்மா எங்கே போகிறாய்?
அத்தை குளிக்கத் தண்ணீர்க் குடம் கொண்டு போகிறேன்
எத்தனை நாள் ஆகும் அத்தை வீடு செல்லவே?
பத்தே நாள்தான்; வேணுமானால் பார்த்துக்கொண்டிரு!

குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் விரும்பிப் படிக்கும் வகையில் இருப்பதுதான் சிறந்த குழந்தை இலக்கியம் என்பார்கள். மேற்கண்ட பாடலுக்கும் இந்த இலக்கணம் பொருந்துகிறதல்லவா?

குழந்தைகளின் கவனத்தைக் கவர்வது அத்தனை எளிதான காரியம் அல்ல. அதேபோல், குழந்தைகளுக்கான இலக்கியம் படைப்பது என்பது அசாத்தியமான உழைப்பைக் கோருவது. அவர்களுக்கான உலகம், மொழி, எளிமை என்று பல விஷயங்களைக் கைக்கொண்டால்தான் குழந்தைகளும் வாசிக்கும் வகையிலான இலக்கியத்தைப் படைக்க முடியும். தமிழில் குழந்தை இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுபவர் அழ. வள்ளியப்பா.

குழந்தைக் கவிஞர் என்று சொன்னாலே அதன் பின்னான வார்த்தையாக அழ. வள்ளியப்பாவின் பெயர்தான் மனதில் தோன்றும். குழந்தைகளுக்கான பாடல்கள் மட்டுமல்லாது,

அவர்களின் பொது அறிவையும் நல்லொழுக்கத்தையும் வளர்க்கும் விதமான கதை, கட்டுரைகளையும் எழுதியவர் அழ. வள்ளியப்பா. குழந்தை இலக்கியத்தில் பிறரும் ஈடுபட பெரும் ஊக்கியாக இருந்தவர்.

குழந்தை இலக்கியத்துக்குப் புகழ்பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்தின் இராயவரத்தில் 1922 நவம்பர் 7-ல் பிறந்தார்.

அவரது ஆரம்பக் கல்வி ராயவரத்தில் அமைந்தது. பிறகு இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீஸ்வர ஸ்வாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பள்ளி நாட்களிலேயே அவரது கற்பனைத் திறன் பளிச்சிட்டது. எனினும் குடும்பச் சூழ்நிலை காரணமாக அவரால் படிப்பைத் தொடர முடியவில்லை. பிறகு, வை. கோவிந்தனின் 'சக்தி' இதழின் பொருளாளராக 1940-ல் பணியில் அமர்ந்தார் வள்ளியப்பா. அந்த இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்த தி.ஜ.ர., வள்ளியப்பாவின் கற்பனைத் திறனைக் கண்டு, எழுதுமாறு ஊக்குவித்தார். அந்த உற்சாகத்தில் 'ஆளுக்குப் பாதி' எனும் தனது முதல் சிறுகதையை எழுதினார் வள்ளியப்பா.

1944-ல் 'மலரும் உள்ளம்' எனும் அவரது முதல் கவிதைத் தொகுப்பு வெளியானது. 1961-ல் அவர் வெளியிட்ட 'சிரிக்கும் பூக்கள்' எனும் கவிதைத் தொகுப்பு, 'குழந்தைக் கவிஞர்' எனும் பட்டத்தை அவருக்குப் பெற்றுத்தந்தது. 'பாலர் மலர்','டமாரம்', 'சங்கு' ஆகிய இதழ்களின் கவுரவ ஆசிரியராகப் பணியாற்றிய அழ. வள்ளியப்பா, 'பூஞ்சோலை', 'கோகுலம்' ஆகிய சிறுவர் இதழ்களின் ஆசிரியராகவும் இருந்தார். தன்னைப் போலவே குழந்தை இலக்கியத்தில் ஈடுபட்ட எழுத்தாளர்களை ஒன்றிணைத்து, 'குழந்தை எழுத்தாளர்கள் சங்கம்' எனும் அமைப்பை உருவாக்கினார். மிகுந்த அக்கறையுடன் குழந்தை இலக்கியத்தை வளர்த்தெடுத்த அழ. வள்ளியப்பா, 1989-ல் தனது 67-வது வயதில் இதே நாளில் காலமானார்.

வள்ளியப்பாவின் கொடையும் தவறவிடும் வாய்ப்புகளும்

https://www.hindutamil.in/news/opinion/columns/734853-azha-valliyappa.html

‘தோசையம்மா தோசை’, ‘அம்மா இங்கே வா வா’, ‘மாம்பழமாம் மாம்பழம்’ – அச்சு இதழ், நூல் தொடங்கி இன்றைய காணொளி வடிவம் வரை, தகவல்தொடர்பு வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு வடிவத்திலும் இடம்பெற்ற, தலைமுறைகளைத் தாண்டிய இதுபோன்ற பாடல்களை எழுதியவர் அழ.வள்ளியப்பா. சிறு வயதுக் குழந்தைகளிடம் மொழியைப் பழக்கப்படுத்தவும், புதிய விஷயங்களைக் கற்றுக்கொடுக்கவும் சந்தத்தோடு பாடப்படும் இதுபோன்ற பாடல்கள் பெரும் துணைபுரிகின்றன. மழலையர் பள்ளிகளிலும் தொடக்கப் பள்ளிகளிலும் இப்படிப் பல பாடல்கள் இன்றைக்கும் பாடப்படுகின்றன.

1930-களில் முன்னோடிப் பதிப்பகமாகவும் இதழ் அலுவலகமாகவும் செயல்பட்டுவந்த வை.கோவிந்தனின் சக்தி காரியாலயத்தில் பணிபுரிந்த பலரும் பிற்காலத்தில் புகழ்பெற்ற இதழாளர்களாகவும் எழுத்தாளர்களாகவும் உருமாறினார்கள். அந்த மரபில் வந்தவர் அழ.வள்ளியப்பா. சக்தி காரியாலயத்தில் காசாளராகப் பணியிலிருந்த அழ.வள்ளியப்பா, தி.ஜ.ர. மூலம் எழுத்துத் துறையில் கால்பதித்தார். பின்னால், வங்கிப் பணியில் சேர்ந்த பிறகும் சிறார் இலக்கியப் பணியை இடையறாது மேற்கொண்டுவந்தார்.

அவருடைய முதல் பாடல் தொகுப்பு ‘மலரும் உள்ளம்’ 1944-ல் வெளியானது. அதே காலத்தில், புதுக்கோட்டையிலிருந்து வெளியான ‘பாலர் மலர்’, ‘டமாரம்’, ‘சங்கு’ ஆகிய மூன்று சிறார் இதழ்களின் நிழல் ஆசிரியராக வள்ளியப்பா செயல்பட்டார். அந்த இதழ்கள் நின்ற பிறகு, ‘பூஞ்சோலை’ இதழின் கௌரவ ஆசிரியரானார். சிறார் இதழ்களுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், பல புதிய எழுத்தாளர்களுக்கு மட்டுமல்லாமல், குழந்தைகள் எழுதவும் பெருமளவு வாய்ப்பு வழங்கி ஊக்குவித்தார் வள்ளியப்பா.

வங்கியில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்திலேயே சிறப்பு அனுமதி பெற்று, ‘தென் மொழிகள் புத்தக அறக்கட்டளை’யில் குழந்தை இலக்கியச் சிறப்பு அலுவலராக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டார். வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் 1983-ல் ‘கோகுலம்’ சிறார் மாத இதழின் கௌரவ ஆசிரியராகச் செயல்பட்டார். அந்தக் காலத்தில் ‘கோகுலம் சிறுவர் சங்கம்’ மூலமாக மாணவர்களைப்

பெருமளவு வாசிப்பு நோக்கியும் எழுத்து நோக்கியும் வள்ளியப்பா ஈர்த்தார்.

காலம் கடந்த பாடல்கள்

குழந்தைகளால் பெரிதும் விரும்பப்பட்ட அவருடைய பாடல்கள் 'மலரும் உள்ளம்' இரண்டு தொகுதிகள், 'சிரிக்கும் பூக்கள்' ஆகிய பெயர்களில் வெளியாகிப் புகழ்பெற்றன. 'பாட்டிலே காந்தி கதை' என்கிற குழந்தைகளுக்கான காவியம், 'நேரு தந்த பொம்மை', 'சுதந்திரம் பிறந்த கதை' என்கிற நீண்ட பாடல் ஆகியவை அவருடைய புதுமையான குழந்தைப் பாடல் முயற்சிகள். அன்று தொடங்கி இன்று வரை அவருடைய பாடல்கள் குழந்தைகளால் பாடப்படுவதற்கு முக்கியக் காரணம் பாடுவதற்கேற்ற சந்தம், இனிமை, எளிமையான மொழிநடை, தெளிவு ஆகியவற்றுடன் இருப்பதுதான். குழந்தைகள் பெரிதும் விரும்பும் உயிரினங்கள் எழுப்பும் ஒலி, கருவிகள் எழுப்பும் ஓசைகளைப் பாடல்களில் அவர் சேர்த்திருந்ததால், அவருடைய பாடல்கள் உயிர்ப்புடன் திகழ்கின்றன.

அழ.வள்ளியப்பா காலத்தில், சிறார் இலக்கியம் இன்று வந்தடைந்துள்ள முற்போக்கான புரிதல்களைப் பெற்றிருக்கவில்லை. அதேநேரம் நமது நிலம், மரபு, நாட்டுத் தலைவர்களைக் குறித்துக் குழந்தைகள் தெரிந்துகொள்ள வேண்டும், மதிக்க வேண்டும் என்கிற அடிப்படைப் பண்புகள் வலியுறுத்தப்பட்டன. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், மாணவப் பருவத்திலேயே ஒற்றுமை உணர்வை ஓங்கச் செய்வதிலும் அன்றைய சிறார் இலக்கியம் பெரும் பங்காற்றியது. பாடநூல்களுக்கு வெளியே உள்ள உலகத்தை அந்த நூல்கள் சிறாருக்குத் தொடர்ந்து அறிமுகப்படுத்தின.

தொலைநோக்குப் பார்வை

இன்றைய சிறார் இலக்கிய எழுத்தாளர்களிடம் அரிதாக உள்ள ஒரு பண்பு, அழ.வள்ளியப்பாவிடம் இயல்பிலேயே இருந்தது. பல தலைமுறைக் குழந்தைகளுக்குப் பிடித்த பாடல்களை இயற்றியுள்ள அவர், தன் முதல் பாடல் தொகுப்பான 'மலரும் உள்ளம்' நூலைத் தமிழ்ப் பேராசிரியர் ஐயன் பெருமாளிடம் காட்டித் திருத்தங்களைப் பெற்ற பிறகே வெளியிட்டது பதிவாகியிருக்கிறது. பிற்காலத்தில், உயிரினங்களைப் பற்றி அவர் எழுதிய 'மிருகங்கள் பேசினால்' என்னும் நூலை வனவிலங்கு அதிகாரி எம்.ஏ.பாட்சாவிடம் திருத்தத்துக்குக் கொடுத்து வாங்கிய பிறகே பிரசுரித்துள்ளார்.

இப்படிக் கருத்துப் பிழை, மொழிப் பிழை, இலக்கணப் பிழையின்றிப் படைப்புகளை அவர் எழுதியதால், குழந்தைகளால் சிறு வயதிலேயே தமிழை எளிமையாக உள்வாங்கிக்கொள்ள முடிந்தது. இத்துடன் மனிதர்கள் மதிப்பீடுகளுடன் வாழ்வதன் அவசியத்தையும், ஒற்றுமை உணர்வையும் அவருடைய படைப்புகள் வலியுறுத்தின. இன்றைய சிறார் எழுத்தில் இது போன்ற தன்மைகளுடன் படைப்பு முதன்மை பெறாமல், சிறார் இலக்கியத் துறையில் பெயர் பெற்றுவிட வேண்டும் என்கிற நோக்கம் பலரிடமும் தூக்கலாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

சிறார் இலக்கியம் எப்படியிருக்க வேண்டும் என்பதற்குத் தெளிவான தொலைநோக்குப் பார்வையை அழ.வள்ளியப்பா வெளிப்படுத்தினார் என்பதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்டலாம். முதலாவது, 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவில் கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, உலக நீதி போன்ற நீதி நூல்களைச் சிறுவர் இலக்கியத்தில் சேர்ப்பது ஏன் தவறு எனச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த வாதத்தை பெ.தூரன் போன்றோர் வழிமொழிந்து பாராட்டியிருக்கின்றனர்.

அடுத்ததாக, 1951-ல் 'கல்கண்டு' இதழில் துப்பாக்கிக் கதைகள் வெளியாகப்போவது தொடர்பான அறிவிப்பை அதன் ஆசிரியர் தமிழ்வாணன் வெளியிட்டிருந்தார். 'இதுபோல் குழந்தைகளுக்குத் தேவையின்றி வன்முறையை அறிமுகப்படுத்துவது தவறு' என்று எழுத்து மூலம் அழ.வள்ளியப்பா வலுவாக இதைக் கண்டித்துள்ளார். இவ்வளவுக்கும் அழ.வள்ளியப்பாவுக்குக் 'குழந்தைக் கவிஞர்' என்கிற அடைமொழியை முன்பு வழங்கியிருந்தவரே தமிழ்வாணன்தான்.

தொலைந்துபோன அக்கறை

வாழ்ந்த காலம் முழுவதும் சிறார் எழுத்தாளர்களையும் மாணவ எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் உந்துசக்தியாகத் திகழ்ந்த வள்ளியப்பா, சிறார் எழுத்தாளர்கள் கூட்டாகச் செயல்படுவதன் அவசியத்தை உணர்ந்திருந்தார். 1950-லேயே குழந்தை எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி, சிறார் இலக்கியத்தை வளர்ப்பதற்குப் பல்வேறு முன்னோடி முயற்சிகளை அவர் முன்னெடுத்தார். தமிழ்நாட்டிலேயே முதன்முறையாகக் குழந்தைப் புத்தகக்காட்சி, குழந்தை நூல் வெளியீட்டு நாள், குழந்தைகள் நாடக விழா, குழந்தை எழுத்தாளர்களுக்கான தனி மாநாடுகள், குழந்தை எழுத்தாளர்களின் படைப்புகளுக்குப் பரிசுகள் -

பதக்கங்கள், 'குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?' நூல் போன்றவை குழந்தை எழுத்தாளர் சங்கம் புரிந்த சில சாதனைகள்.

இதுபோல் கடந்த நூற்றாண்டில், சிறார் இலக்கியம் முக்கியமான பல கட்டங்களைக் கடந்துவந்துள்ளது. அன்றைய தமிழ் இலக்கியவாதிகளில் பலர் சிறாருக்கும் அக்கறையுடன் எழுதிவந்தனர். சிறார் இலக்கியம் குறித்த அலட்சியமோ, எள்ளல் தொனியோ அந்தக் கால இலக்கியவாதிகளிடம் காணப்படவில்லை. இன்றைய நவீன இலக்கியவாதிகளில் பலரும் சிறார் இலக்கியத்தை அக்கறையுடன் கணக்கிலெடுத்துக்கொண்டதுபோல் தோன்றவில்லை. சிறார் இலக்கியத்தை ஆக்கபூர்வமாக அணுகுவதும் விமர்சனபூர்வமாக அதை வளர்த்தெடுப்பதும் எவ்வளவு முக்கியம் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்களா என்பது கேள்விக்கு உரியதாக இருக்கிறது.

இலக்கிய வாசிப்பென்றாலும் சரி, அச்சு இதழ் வாசிப்பென்றாலும் சரி, முதல்நிலை வாசகர்கள் உருவாக்கப்படவில்லை என்றால், எதிர்காலத்தில் இந்தத் துறைகள் ஆட்டம் கண்டுவிடும். அதற்கான அறிகுறிகள் கடந்த 10 ஆண்டுகளில் வலுவாகவே தெரிகின்றன. ஒரு சமூகத்துக்கு இலக்கியப் படைப்புகளும் அச்சு இதழ்களும் எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு முதல்நிலை வாசகர்களும் கவனமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அடித்தளம் வலுவாக இருந்தால் மட்டுமே, நாம் நினைக்கும் உயரத்துக்கு கட்டிடத்தைக் கட்டியெழுப்ப முடியும். வாசிப்புக்கான அத்தகைய சில அடித்தளங்களை அழ.வள்ளியப்பா உள்ளிட்டோர் கையளித்துச் சென்றிருக்கின்றனர். ஆனால், அந்த அடித்தளங்கள் காலந்தோறும் மேம்படுத்தப்படவும் வளர்த்தெடுக்கப்படவும் வேண்டிய கடமை நம் தலைமுறைக்கு இருக்கிறது.

அன்புள்ள அப்பா... அழ.வள்ளியப்பா

https://www.hindutamil.in/news/vetrikodi/special-articles/896780-dear-dad.html



குழந்தைகள் மகிழ்ச்சியோடு பாட ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைத் தந்தவர் எங்கள் (தேவி நாச்சியப்பன்) தந்தை குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா. இந்தப் பாடல்களை எல்லாம் எப்படி எழுதினார்? எங்கு எழுதினார்? குழந்தைக் கவிஞர் பாடல்கள் எழுதத் தனி அறைக்குள்ளோ, அமைதியான சூழலைத் தேடியோ சென்றதில்லை. குழந்தைகளோடு குழந்தையாகப் பேசிக் கொண்டிருக்கும் போதே அப்பா பல பாடல்களை எழுதினார்கள்.

அவற்றுள் ஒன்றைச் சொல்கிறேன். அப்பா இந்தியன் வங்கியில் பணியாற்றினார்கள். சென்னையில் 36 ஆண்டுகளும் காரைக்குடியில் 4 ஆண்டுகளும் பணியாற்றி ஓய்வு பெற்றார். காரைக்குடியில் இருக்கும் போது எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் அண்ணாமலை என்ற சிறுவன் இருந்தான். அவனும் அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் மாலை நேரத்திலும் விடுமுறை நாட்களிலும் எங்கள் வீட்டில்தான் விளையாடிக் கொண்டிருப்பார்கள். என்று தொடங்கி, அண்ணாமலை முன்னாலே ஆனை வருவதையும், பின்னாலே ஆடிப்பாடி ஓடி வரும் அலமுவையும் பார்த்ததாக ஒரு பாடல் எழுதினார்.

அண்ணாமலை மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். யாராவது "அண்ணாமலை அண்ணாந்து பார்த்தான் ஒண்ணுமேயில்லை" என்று கேலியாகப் பாடினால், அவனுக்காக வள்ளியப்பா எழுதிய பாடலைப் பெருமையோடு பாடுவான். 1975-ம் ஆண்டில், சர்வதேச மகளிர் ஆண்டில் பெண்களுக்காகப் பல விழாக்களும் சிறப்பு நிகழ்ச்சிகளும் பல இடங்களில் நடைபெற்றன. கவிமணி குழந்தைகள் சங்கக் குழந்தைகளாகிய

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது, ஒரு சிறுமி "பெண்களான நாங்கதான் சிறப்பு மிக்கவர்கள். அதான் கொண்டாடுகிறார்கள்." என்றாள்.

ஒரு சிறுவன் " அப்படீன்னா ஆண்களுக்குச் சிறப்பே இல்லையா? "என்று ஏக்கத்துடன் கேட்டான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பா ஒரு பாடல் எழுதினார்கள். என்று ஒரு பாடலை எழுதிக் கொடுத்ததும் அந்தச் சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சி. துள்ளி குதித்துக் கொண்டு இந்தப் பாடலைப் பாடி, "பார்த்தாயா ஆணினத்தின் சிறப்பை?" என்று பெருமிதத்துடன் கேட்டான். வள்ளியப்பா பெண்களை மதித்துப் போற்றுபவர் என்றாலும் சிறுவனின் ஏக்கத்தைப் போக்கப் பாடினார்.



தந்தை பிறந்தது புதுக்கோட்டை மாவட்டம், ராயவரம். குழந்தைப் பிரியரான நேருவை, 'சாகித்ய அகாதமி' நடத்திய புத்தகக் காட்சியில், தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த வள்ளியப்பா சந்தித்தார். நேரு, வள்ளியப்பாவிடம் குழந்தைப் புத்தகங்கள் பற்றிய விவரங்களை அக்கறையுடன் கேட்டறிந்தார். அதனால் தமிழகம் திரும்பிய வள்ளியப்பா, தான் நிறுவிய குழந்தை எழுத்தாளர் சங்கத்தில் ஆண்டு தோறும் நேரு பிறந்த நாளில் குழந்தைகளுக்கான நூல்களை வெளியிடுவது என உறுப்பினர்கள் சம்மதத்துடன் முடிவு செய்தார். அதன்படி ஆண்டு தோறும் வெளியிட்டனர். ஒரு ஆண்டு குழந்தைகள் தினத்தில் 77 குழந்தை நூல்களை வெளியிட்டுச் சாதனை படைத்தனர்.

நேரு மீது கொண்ட அன்பால் "நேரு தந்த பொம்மை" என்ற பாடல் நூலையும்," நேருவும் குழந்தைகளும்" என்ற உரைநடை நூலையும் எழுதினார். இந்த நூலில் நேரு குழந்தைகளிடம் கொண்ட அன்பை ஒளிப்படங்களுடன் வெளியிட்டுள்ளார். எங்கள் தந்தை, "குழந்தைகளின் மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சி." என்று வாழ்ந்தவர். தாம் எழுதிய பாடல் கருத்துக்களைத் தாமும் பின்பற்றினார். பகிர்ந்து உண்பது, சிரமப்படுவோர்க்கு உதவுவது, காலத்தைப் போற்றுவது, நண்பர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது எனக் குழந்தைகளுக்காகப் பாடலில் பாடிய கருத்துகளைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். ஆயிரக்கணக்கான குழந்தைகளைத் தாம் வாழ்ந்த காலத்திலும், மறைந்த பிறகும், எக்காலத்திலும் மகிழ வைக்க ஏற்ற பாடல்கள், கதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகளைத் தந்தவர் வள்ளியப்பா. நூற்றாண்டு காணும் குழந்தைக் கவிஞரின் படைப்புகளைக் குழந்தைகள் படித்து மகிழ வேண்டும், பயன் பெற வேண்டும்.

அம்மா இங்கே வா வா

https://www.jeyamohan.in/34376/

பெரும்மதிபிற்குரிய ஜெ அவர்களுக்கு,

உங்களின் இணையத்தை வாசிக்கும் அனேக ரசிகர்களில் நானும் ஒருவன். உங்களின் வார்த்தைகளுக்கும், படைப்புகளுக்கும் நன்றி!

என்னுள் சில நாட்களாய் வருடிக் கொண்டிருக்கும் கேள்வி ஒன்றை உங்களிடம் கேட்கத் தோன்றுகிறது.

என் ஒரு வயது மகனுக்காக இணையத்தில் "Tamil Rhymes" தேடிக்கொண்டிருந்தேன்.

அவன் விரும்பும் பொம்மைகள்(Cartoon) அதில் ஆடிப்பாடுகின்றன. அவன் தன் மழலை மொழியில் அவற்றைத் திரும்பி சொல்லும்போது மெய்சிலிர்த்துப் போகிறேன்.

ஆனால், என்னை ஒரு விஷயம் உறுத்திக்கொண்டே இருக்கிறது.

அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல் என்று பிள்ளைகளுக்கு அறம் சொல்லிக் கொடுத்த நாம்,

அச்சம் தவிர், ஆண்மை தவறேல், இளைத்தல் இகழ்ச்சி, ஈகைத் திறன்

என மிகச்சிறந்த சீரிய பண்புகளை போற்றிய பாரதியையும் மறந்து

அம்மா இங்கே வா வா, ஆசை முத்தம் தா தா, இலையில் சோறு போட்டு, ஈயை தூர ஓட்டு (சோத்தப் போட்டு திங்க சொன்னா கூட பரவால்ல..)

என அற்ப விசயங்களைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்து விட்டோம் என்பதே என் வருத்தம்.

இணையம் முழுதும் "அம்மா இங்கே வா வா.. " ஆக்கிரமித்துக் கொண்டு தான் இருக்கிறது. அதையும் தாண்டி,

பழைய, புதிய ஆத்திசூடியை எடுத்து செல்வது எனக்கு சிரமமாகவே இருக்கிறது. அம்மா இங்கே வா வா, எளிதாகத் தோன்றினாலும், அறத்தைத் தொலைத்து விட்டதைப் போல் தோன்றுகிறது. சில நாட்களில், அகநானூறு, புறநானூறு போல், ஆத்திச்சூடியும் மனப்பாடப் பகுதியாக மட்டுமே ஆகி விடும் போல் இருக்கிறது.

இது நீங்கள் முன்னர் எழுதிய ஒரு கட்டுரையில் கூறியது போல், அரண்மனையின் உண்மையான வரலாற்றினை மறந்து, குஷ்பு குளித்த பெருமையினைத் தம்பட்டம் அடிக்கும் கூட்டமாக மாறுவது போல எனக்கு தோன்றுகிறது.

“அம்மா இங்கே வா வா” விற்கு வரலாறு ஏதேனும் உண்டா?

இதை பற்றிய உங்கள் கருத்தை அறிய ஆசைப்படுகிறேன்.

இப்படிக்கு நன்றியுடன் ரசிகன்,

ஓம்பிரகாஷ் பாலையா

அன்புள்ள பாலையா

அம்மா இங்கே வா வா என்ற குழந்தைப்பாடல் குழந்தைக்கவிஞர் என்று அழைக்கப்பட்ட மே.வீ.கோபாலகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டது. வள்ளியப்பாவின் குழந்தைக்கவிதைகள் மிகப்பிரபலமானவை,

அப்பாடலில் அகரவரிசை உள்ளதனால் குழந்தைகளுக்குக் கற்பிக்க இலகுவாக இருக்கும் என்று ஆசிரியர்கள் எண்ணினார்கள். அதனால் பள்ளிகளில் இக்கவிதை அதிகமுக்கியத்துவம் பெற்றது,

ஆனால் அதை விட குழந்தைப்பாடல்களைக் குழந்தைகளே தீர்மானிக்கின்றன. எப்படியோ குழந்தைகளுக்கு இப்பாடல் பிடித்துப்போய்விட்டது. இன்றும் கூட பள்ளிகளில் பல கவிதைகளைச் சொல்லிக்கொடுத்தாலும்கூட இப்பாடலே குட்டிநாக்குகளில் உடனடியாக எதிரொலிக்கிறது.

குட்டிசைதன்யா வாயில் இக்கவிதை அவளறியாமல் எச்சில்போல சொட்டிக்கொண்டே இருக்கும் அந்நாளில்.

ஏன்? குழந்தையின் உள்ளம், அம்மாவுக்கான ஏக்கம் இதில் இருப்பதனாலா? அம்மாவைப்பிரிந்து பள்ளிக்குச் சென்ற பிள்ளையின் உள்ளம் அம்மாவை அழைக்கிறதா? அம்மா, சாப்பாடு என குழந்தைக்குப் பிரியமான விஷயங்கள் வரிசையாக இருப்பதனாலா? அதை சொல்லவே முடியாது.

அகரவரிசைக்காக ஈயை தூர ஓட்டு என்பது போன்ற வரிகளை வைத்திருக்கிறார். அது இப்போது கொஞ்சம் ஒவ்வாமல் இருப்பதாக நீங்கள் நினைப்பதைப் புரிந்துகொள்கிறேன். ஆனால் உலகமெங்குமே குழந்தைக் கவிதைகளில் நல்லொழுக்கம், உயர்கருத்துக்கள் எவையும் இருப்பதில்லை. அவை சொல்விளையாட்டுகளாக, எளிய நேரடி வெளிப்பாடுகளாகவே இருக்கும்.

உதாரணமாக 'humpty dumpty sat on a wall' அல்லது 'rain rain go away' போன்ற பாடல்களில் என்ன கவித்துவமும் உயர்கருத்தும் உள்ளன? குழந்தைப்பாடல் குழந்தையின் வாயில் நிற்கவேண்டும். குழந்தை நாக்கு அவற்றைச் சொல்வதன் வழியாக மொழியின் சாத்தியக்கூறுகளைக் கற்கவேண்டும்,அவ்வளவுதான்.

அவற்றில் கண்டிப்பாகக் குழந்தையின் உள்மனம் புரிந்துகொள்ளும் ஒரு அர்த்தம் உள்ளது. அதை வேண்டுமென்றால் குழந்தை அவற்றை ஏற்றுக்கொண்டபின் நாம் அலசி ஆராயலாம். ஆனால் அதைத் திட்டமிட்டு உருவாக்கிவிடமுடியாது. அம்மா இங்கே வா வா ஓர் இந்திய யதார்த்தம். இங்குள்ள நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான பண்பாட்டுக்கூறுகளின் சந்திப்புப் புள்ளியில் அது நிகழ்ந்தது,அவ்வளவுதான்.

ஜெ

https://www.keetru.com/index.php?option=com_content&view=article&id=9976&Itemid=139

'குழந்தைக் கவிஞர்' என்னும் தொடரைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர், அழ.வள்ளியப்பா. இவர் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுப் புகழீட்டும் ஆற்றல் பெற்றிருந்தும் தம் படைப்பாற்றல் முழுவதையும் குழந்தை இலக்கியத்துக்கே அர்ப்பணித்தவர். குழந்தை எழுத்தாளர் சங்கம் என்னும் அமைப்பை உலகத்திற்கே ஒரு புதுமையாய் இவர் தோற்றுவித்தார். முதல் குழந்தைப் புத்தகக் காட்சி, முதல் குழந்தை எழுத்தாளர் புகைப்படக் காட்சி, முதல் குழந்தை இலக்கிய மாநாடு - இப்படி அவர் முதல் முதலாக ஏற்படுத்திய பலதுறைச் சாதனைகள்தாம் தமிழகத்தில் இன்றும் குழந்தை இலக்கியத்தை வளப்படுத்தி வருகின்றன. இவரின் மலரும் உள்ளம் என்னும் படைப்பு மத்திய மாநில அரசுகளின் பரிசு பெற்றது.

நூல்கள் பாடல்கள்

1. மலரும் உள்ளம் (முதல் தொகுதி)

2. மலரும் உள்ளம் (இரண்டாம் தொகுதி)

3. சிரிக்கும் பூக்கள்

4. பாட்டிலே காந்தி கதை

5. ஈசாப் கதைப் பாடல்கள்

6. பாப்பாவுக்குப் பாட்டு

7. சின்னஞ்சிறு பாடல்கள்

8. வெளிநாட்டு விடுகதைகள்

9. நேரு தந்த பொம்மை

10. சுதந்திரம் பிறந்த கதை

11. பாடிப் பணிவோம்

கதைகள்

12. பர்மா ராணி

13. நீலா மாலா

14. மணிக்கு மணி

15. பாட்டிக்குப் போட்டி

16. நல்ல நண்பர்கள்

17. குதிரைச் சவாரி

18. ரோஜாச் செடி

19. உமாவின் பூனைக்குட்டி

20. அம்மாவும் அத்தையும்

21. மூன்று பரிசுகள்

22. வேட்டை நாய்

23. திரும்பி வந்த மான்குட்டி

கட்டுரை நூல்கள்

24. பிள்ளைப் பருவத்திலே

25. பெரியோர் வாழ்விலே

26. சின்னஞ்சிறு வயதில்

27. கதை சொன்னவர் கதை

28. எங்கள் கதையைக் கேளுங்கள்

29. நேருவும் குழந்தைகளும்

30. மிருகங்களுடன் மூன்று மணி

31. விடுகதை விளையாட்டு

32. நம் நதிகள்

நாடகம்

33. வெற்றிக்கு வழி

ஆய்வு நூல்

34. வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்

மொழிபெயர்ப்பு

35. எக்காலத்துக்கும் ஏற்ற கதைகள்

36. ரோகந்தாவும் நந்திரியாவும்

37. மோரா

தொகுப்பு நூல்

38. சிறுவர் கதைப் பாடல்கள்

பரிசு பெற்றவை

மத்திய அரசின் பரிசு பெற்றவை

1. மலரும் உள்ளம் (முதல் தொகுதி)

2. பாட்டிலே காந்தி கதை

தமிழக அரசின் பரிசு பெற்றவை

1. மலரும் உள்ளம் (முதல் தொகுதி)

2. பாப்பாவுக்குப் பாட்டு

3. நல்ல நண்பர்கள்

4. பெரியோர் வாழ்விலே

5. சின்னஞ்சிறு வயதில்

6. பிள்ளைப் பருவத்தில்

'*மலரும் உள்ளம்*' என்பது குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா எழுதிய புகழ்பெற்ற தமிழ் சிறுவர் பாடல்களின் தொகுப்பு நூல்.

1954-ல் முதன்முதலில் வெளியான இந்த நூல், குழந்தைகளுக்கான வேடிக்கை, நீதி மற்றும் கதைப் பாடல்களைக் கொண்டுள்ளது. இது தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும், இது பெரும்பாலும் பாரி நிலையத்தால் வெளியிடப்பட்டது.

மலரும் உள்ளம் - முக்கிய விவரங்கள்:

- **ஆசிரியர்:** அழ. வள்ளியப்பா (குழந்தைக்கவிஞர்).
- **பொருள்:** குழந்தைகளுக்கான சிறுவர் பாடல்கள், கதைப் பாடல்கள்.
- **சிறப்பு:** மத்திய மற்றும் தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.
- **தொகுதிகள்:** மலரும் உள்ளம் முதல் மற்றும் இரண்டாம் தொகுதிகள் உள்ளன.
- **பொருளடக்கம்:** அன்பைப் பெருக்குதல், இயற்கை, அச்சத்தைப் போக்குதல் போன்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன.

மலரும் உள்ளம்-1-ல் உள்ள சில பாடல் தலைப்புகள்:

- அன்பு
- ஏமாற்றம்
- சின்னச் சின்னப் பறவை

இந்த பாடல்கள் பள்ளி மாணவர்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்த ஏற்றவை.





இனிய தமிழ்ப் பாட்டால் உள்ளத்தை அள்ளும் கவித்திறம் வாய்ந்தவர் திரு. வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர் அவர்.

'மலரும் உள்ளம்' என்னும் இந்நூல் ஒரு கவிதைப் பூஞ்சோலை. அங்கே அரும்பு மலர்ந்து விரியும்; அருணன் கதிரைச் சொரியும். சின்னஞ் சிறு குருவி பறக்கும்; பென்னம் பெரிய யானை நடக்கும். பத்துமாதக் குழந்தை தத்தித் தவழும், பஞ்சுக்கால் பூனை பையச்

சென்று பாலைக் குடிக்கும்; புத்தர் அறமுறைப்பார்; பாரதியார் பாட்டிசைப்பார். கண்ணனும் காந்தியும் காட்சி தருவர். அச்சோலையில் நல்ல மலர்கள் நறுமணங் கமழும்.

[01] https://azhavalliappa.com/apanel/pdf/book/1360605423161.pdf

[02] https://www.tamilvu.org/library/nationalized/pdf/82-a.zhavalliyappa/malarumvullampart-ii.pdf

[03] https://www.tamilvu.org/ta/library-l9325-html-l9325ind-146939

அழ.வள்ளியப்பாவின் படைப்புகள்

சரவணன் பார்த்தசாரதி

https://www.panchumittai.com/2018/11/14/post_91/

உலகின் மாபெரும் ஞானிகளில் ஒருவரான கன்ஃபூசியஸ், ஒரு குழந்தைக்கு மொழியைக் கற்பிக்கச் சிறந்த வழி அம்மொழியின் பாடல்களை அதற்குச் சொல்லித்தருவதுதான் என்று கூறியிருக்கிறார்.

இன்றுவரை நமது ஆரம்பப்பள்ளி வகுப்பறைகளில் பாடல்கள் பாடங்களாய் இருப்பதற்கு கன்ஃபூசியஸின் இந்த அறிவுரையும் ஒரு காரணம். எந்தவொரு மொழியிலும் குழந்தைகளுக்கான பாடல்களை எழுதுவதென்பது சவாலான பணியாகவே இருக்கிறது.

தமிழில் குழந்தைகளுக்கான பாடல்களை எழுதுவதற்கெனத் தன் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டவர் – அழ.வள்ளியப்பா. புதுக்கோட்டை அருகில் உள்ள ராயவரம் என்ற ஊரில் நவம்பர் 7, 1922 –ஆம் ஆண்டு பிறந்த அவர், தனது பதின்ம வயதில் எளிய சொற்களைக்கொண்டு பாடல்களை இயற்றத் தொடங்கினார். பின்னர் சக்தி பத்திரிக்கையில் பணிபுரிந்தபோது தி.ஜ.ரங்கநாதன் (தி.ஜ.ர) அவர்களின் தூண்டுதலில் சில கதைகளை எழுதினார். அடுத்த சில மாதங்களிலேயே அவர் வங்கிப்பணிக்குச் சென்றுவிட்டாலும்

சிறார்களுக்கான பாடல்கள், கதைகள் எழுதுவதைத் தனது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார். குழந்தை எழுத்தாளர்கள் பலரை ஒன்று திரட்டி 1950-ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

குழந்தைக்கவிஞர் என்று அழைக்கப்பட்ட அவர் தனது வாழ்நாளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். அவரது நூல்கள் சிலவற்றைப்பற்றி நாம் இப்போது பார்ப்போம்.

<u>சின்னஞ்சிறு பாடல்கள்</u>

முதன்முதலாக வசிப்பிற்குள் நுழைய நினைக்கும், பத்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பாடல்கள் அடங்கிய நூல் இது. தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் புகழ்பெற்ற, "மாம்பழம்" என்ற பாடல் இத்தொகுதியில்தான் உள்ளது.

மாம்பழமாம் மாம்பழமாம்.

மல்கோவா மாம்பழம்.

சேலத்து மாம்பழம்.

தித்திக்கும் மாம்பழம்.

அழகான மாம்பழம்.
அல்வாபோல் மாம்பழம்

தங்க நிற மாம்பழம்.

உங்களுக்கு வேண்டுமா?
இங்கே ஓடி வாருங்கள்

பங்குபோட்டுத் தின்னலாம்.

<u>குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் முதல் தொகுதி</u>

பாடல்களின் வழியே கதை சொல்வது என்பது ஒரு கலை. வாசிக்கும் குழந்தைகளின் வயது, அவர்கள் அறிந்த சொற்கள், பாடலின் அளவு இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் ஒரு கதையைப் பாடலாய் இயற்ற முடியும். அதே நேரம் சந்தம் தவறிவிட்டால் பாடலின் ஒழுங்கு

கெட்டுவிடும். செம்மொழியாம் தமிழில் பாடல்கள் மட்டுமே இலக்கியமாக இருந்த காலம் ஒன்று உண்டு. பின்னர் உரைநடை செல்வாக்கு செலுத்தினாலும், தமிழில் இன்றுவரை சொற்களை உருவாக்கவும், இடத்தைப் பொறுத்து அவற்றின் பொருளை மாற்றவும் கவிஞர்களுக்கு மட்டுமே முழுச்சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியான தமிழ்க்கவிப் பாரம்பரியத்தில் வந்த ஒரு கவிஞர் என்பதால் அழ.வள்ளியப்பா கதைப்பாடல் இயற்றுவதில் தேர்ந்து விளங்கினர்.

உதாரணமாக இத்தொகுதியில் இருக்கும் 'கடலின் ஆழம்?" பாடலைப் பார்ப்போம்.

காட்டை விட்டுக் குள்ள நரியும்
வெளியில் வந்ததாம்
கடலைப் பார்க்க வேண்டு மென்றே
ஆசை கொண்டதாம்.
காற்று வீசும் கடற்கரைக்கு
வந்து சேர்ந்ததாம்.
கரையில் நின்ற படியே கடலை
உற்றுப் பார்த்ததாம்.
"கடலின் ஆழம் அதிக மென்றே
எனது பாட்டனார்
கதைகள் சொல்லும் போதே எனக்குச்
சொல்லி யிருக்கிறார்.
கடலின் ஆழம் என்ன வென்றே
இந்த நேரமே
கணக்காய் நானும் அளந்து சொல்வேன்"
என்று ரைத்ததாம்.

தண்ணீர் அருகே சென்று நரியும்
நின்று கொண்டதாம்.
தனது வாலை மெள்ள மெள்ள
உள்ளே விட்டதாம்.
தண்ணீ ருக்குள் வாலை முழுதும்
விட்ட வுடனேயே
தரையும் அந்த வாலின் நுனியில்

தட்டுப் பட்டதாம்.

"கடலின் ஆழம் எனது வாலின்

நீளம் தானடா!

கண்டு பிடித்து விட்டே" னென்று

துள்ளிக் குதித்ததாம்.

"அடடா, 'மிகவும் ஆழம்' என்று
சொல்லும் கடலையே

அளந்து விட்டேன்" என்றே பெருமை

அளக்க லானதாம்!

குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள் இரண்டாம் தொகுதி

கதைகள் வழியே குழந்தைகளுக்கு அறவுரை சொல்வது, வாழ்வின் நோக்கங்களைப் புரிய வைப்பது, அறத்தைப் போதிப்பது என்பது காலங்காலமாக இருந்துவரும் நடைமுறைதான். ஆனால் குழந்தைப் பாடல்கள் இயற்றப்படும்போது கருத்து சொல்லப்பட வேண்டும் என்ற நோக்கத்தைவிட பாடலின் சந்தம் மற்றும் ஓசை நயம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில்தான் கவிஞர்கள் கவனம் செலுத்துவார்கள். ஆனால் அழ.வள்ளியப்பாவின் "அன்னை மொழி" என்ற இப்பாடலை வாசித்துப்பாருங்கள்.

குருவி ஒன்று மரத்திலே
கூடு ஒன்றைக் கட்டியே
அருமைக் குஞ்சு மூன்றையும்

அதில் வளர்த்து வந்தது.

நித்தம், நித்தம் குருவியும்

நீண்ட தூரம் சென்றிடும்;
கொத்தி வந்து இரைதனைக்

குஞ்சு தின்னக் கொடுத்திடும்.

இறைவன் தந்த இறகினால்

எழுந்து பறக்கப் பழகுவீர்.

இரையை தேடித் தின்னலாம்'

என்று குருவி சொன்னது.

‘நன்று நன்று நாங்களும்

இன்றே பறக்கப் பழகுவோம்’
என்று கூறித் தாயுடன்

இரண்டு குஞ்சு கிளம்பின.

ஒன்று மட்டும் சோம்பலாய்

ஒடுக்கிக் கொண்டு உடலையே,

அன்று கூட்டில் இருந்தது!

ஆபத் தொன்று வந்தது!

எங்கி ருந்தோ வந்தனன்,

ஏறி ஒருவன் மரத்திலே.
அங்கி ருந்த கூட்டினை

அடைய நெருங்கிச் சென்றனன்.

சிறகு இருந்தும் பறக்கவே
தெரிந்தி டாமல் விழித்திடும்

குருவிக் குஞ்சைப் பிடித்தனன்;

கொண்டு வீடு சென்றனன்.

குருவிக் குஞ்சு அவனது

கூட்டில் வாடலானது.
அருமை அன்னை உரைத்தது

அதனின் காதில் ஒலித்தது.

குழந்தைகள் தாங்கள் ஏற்கனவே கற்றுக்கொண்ட சொற்களைக்கொண்டு எழுதப்பட்ட கதைகளையும், பாடல்களையும் வாசிக்கும்போது அவற்றில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துகளை எளிதில் புரிந்துகொள்கின்றனர். பாடவும் ஏதுவான சந்தத்தில் அமைந்துள்ள இப்பாடல், சோம்பியிருப்பத்தின் விளைவை பொட்டில் அடித்ததுபோல் கூறுகிறது. இக்கருத்தை ஒரு குழந்தைக்கு இதைவிடவும் சிறப்பான முறையில் கூறிவிட முடியாது என்பதே நிதர்சனம்.

குழந்தைக்கவிஞரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையத்தளத்தில் (http://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-82.htm) அவருடைய பாடல்கள் மட்டுமல்லாமல் பர்மா ரமணி, நீலா மாலா உட்படப் பல நெடுங்கதைகளும் வாசிக்கக்கிடைக்கின்றன. மேலும் youtube இணையத்தளத்தில்


அவருடைய பாடல்கள் குழந்தைகளைக் கவரும் வண்ணம் அசைபடங்களாக (cartoons) மாற்றப்பட்டுக் காணக்கிடைக்கின்றன.

அழ.வள்ளியப்பாவின் இன்றைய தேவை

இரண்டாயிரத்திற்குப் பின்னர் 'பாடல் வழியே தமிழ் கற்பித்தல்' என்ற முறை மிகப்பெரிய சரிவைச் சந்தித்து வருகிறது. இதற்கு அரசின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றம், ஆங்கில வழிக்கல்வி ஆகியவை காரணங்களாகச் சொல்லப்பட்டாலும், தரமான குழந்தைப்பாடல்களை எழுதும் திறன்கொண்ட கவிஞர்கள் அருகிவிட்டதும்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கல்வியாளர்கள் கூறுகின்றனர். தமிழில் அப்படியான கவிஞர்கள் உருவாகி வரும்வரை இந்த இடைவெளியை இட்டு நிரப்பும் வலிமை அழ.வள்ளியப்பாவின் படைப்புகளுக்கு உண்டு என்று உறுதியாகக் கூறலாம்.

வண்ணநதி இதழில் வெளியான எனது கட்டுரை.

நன்றி: வண்ணநதி





குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பாவின் 100 வது பிறந்தநாளையொட்டி பிரதமர் மோடி மரியாதை...

https://www.maalaimalar.com/news/national/pm-pays-tributes-to-tamil-writer-valliappa-on-birth-centenary-533662

அவரது முயற்சிகள் இன்றைய காலத்திலும் தொடர்ந்து பலரை ஊக்குவிக்கிறது. அவரது இலக்கியங்கள் ஆன்மீகம், அகிம்சை, தேசபக்தியை ஒருங்கிணைத்துள்ளன.




ஞானசம்பந்தன்
தமிழ் உலகம்

அழ(கு)வள்ளியப்பா

https://gnanasambandan.in/%E0%AE%85%E0%AE%B4%E0%AE%95%E0%AF%81%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE/



வட்டமான தட்டு

தட்டு நிறைய லட்டு

லட்டு மொத்தம் எட்டு...

இப்படிப்பட்ட பாட்டுக்கள்தான் குழந்தைகளின் உள்ளங்களில் எளிதில் பதியும். பொருளும் புரியும். குழந்தைகளுக்கான இலக்கியம் என்பது தமிழில் ***ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை*** *எனத் தொடங்குகிறது.*

உலகம் முழுவதும் குழந்தைகளுக்கான இலக்கியங்களைப் படைப்பவர்கள் குழந்தைகள் மனதில் மட்டுமல்லாது உலகோர் மனதிலும் நிற்கிறார்கள். இவ்வகையில் தமிழகத்தின் குழந்தை இலக்கியக் கவிஞர்களுள் குறிப்பிடத்தகுந்தவர் ***அழ.வள்ளியப்பா*** *அவர்கள்.*

இவரது பாடல்களான....

மியாவ் மியாவ் பூனையார், மீசையுள்ள பூனையார்...
காட்டை விட்டு குள்ளநரியும் வெளியில் வந்ததாம்
கடலைப் பார்க்க வேண்டுமென்று ஆசைக்கொண்டதாம்...
மாம்பழமாம் மாம்பழம் மல்கோவா மாம்பழம்...
ஆடும் மயிலிது நன்றாய் ஆடும் மயிலிது
நட்டுவனார் இல்லாமலே ஆடும் மயிலிது...
எங்கள் பள்ளிக்கூடமே எளிமைமிக்க நிலையமே
அங்கே சென்று கற்பதால் அறிவு மேலும் வளருமே...
கடகடகட கடகடா கடகடகட கடகடா வண்டி வருகுது
காளைமாடு இரண்டு பூட்டி வண்டி வருகுது...

போன்றவை நாம் நம் குழந்தைப் பருவத்தை நமக்கு நினைவூட்டும்.

குழந்தை இலக்கியங்களை நாம் படிக்கும்போது அதில் ஒரு ஆச்சரியத்தைப் பார்க்கலாம். அது ஒரு மாயக்கண்ணாடி. குழந்தைகளைப் பெரியவர்களாகவும், பெரியவர்களைக் குழந்தைகளாகவும் காட்டும் ஆற்றலுடையது.

குழந்தை இலக்கியங்களில்தான் மான் பேசும், மயில் பேசும், கிளி பேசும், குயில் பாடும் எனும் அற்புதத்தைக் காணலாம். இத்தகைய குழந்தைப் பாடல்களின், இலக்கியங்களின் வளர்ச்சியே இன்றைய கார்ட்டூன் உலகம். இந்தக் குழந்தைகள் உலகத்தின் பிதாமகர்களில் ஒருவரான இராயவரம் அழ.வள்ளியப்பா அவர்கள் குறித்து மேலும் சில செய்திகளைக் காண்போம்....

தமிழ் இலக்கிய உலகின் பிதாமகர், குழந்தைக் கவிஞர் என்றும் போற்றப்படுபவர் அழ.வள்ளிப்பா. இவர் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரம் என்னும் சிற்றூரில் 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் தேதி பிறந்தார். பள்ளிப்படிப்பைத் தம் சொந்தஊரிலுள்ள இராமச்சந்திரபுரம் ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி உயர்நிலைப்பள்ளியில் படித்தார்.

பின்னர் பேராசிரியர்கள் **கு.மதுரை முதலியார், இளவழகனார், டாக்டர் இராசமாணிக்கனார்** ஆகியோரிடம் சிலகாலம் தமிழ் பயின்றார் வள்ளியப்பா. தம் பதிமூன்றாம் வயதில் கவிதை எழுதத் தொடங்கினார் அழ. வள்ளியப்பா.

‘சக்தி’ என்னும் பத்திரிக்கை இதழில் தி.தி.ஜ.ரங்கநாதனின் ஊக்குவிப்பால் **‘ஆளுக்குப் பாதி’** என்னும் தம் முதல் கதையை எழுதினார். பின்னர் சக்தியிலிருந்து விலகி வங்கிப் பணியல் சேர்ந்தார். வங்கிப் பணியில் இருக்கும்போதே பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய செய்தித்தாள்களுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார் அழ. வள்ளியப்பா. பின்னர் 1951முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழுக்கும், ஓய்வு பெற்ற பின் 1983முதல் 1987 வரை கல்கி

வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களையும் 55க்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். தம்முடைய எழுத்துத் திறமை அனைத்தையும் குழந்தை இலக்கியம் படைப்பதிலேயே செலவிட்டார்.

குழந்தைகளுக்கு எழுதுபவர்களை ஒன்று சேர்த்து 1950ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர் சங்கத்தை நிறுவினார். 16ஆண்டுகளுக்கும் மேலாக 5 சிறுவர் பத்திரிக்கைகளின் பொறுப்பாசியராக இருந்தார் அழ.வள்ளியப்பா.

அழ.வள்ளியப்பா இலக்கியம், நூல் கலை தொடர்பான தமிழ்நாட்டு அரசினரின் குழந்தை இலக்கிய வளர்ச்சி – ஆராய்ச்சி, திரைப்படப் பரிசுத்தேர்வுக் குழு, பாரதீய வித்யா பவன் ஆட்சிக்குழு மற்றும் தேசிய புத்தக டிரஸ்ட் ஆலோசனைக்குழுவில் உறுப்பினராகவும் இருந்தார்.

1979இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்கி அறக்கட்டளை நிகழ்வில் ‘வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்’ என்ற தலைப்பிலும், 1981இல் 5ஆவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டிலும் சொற்பொழிவாற்றியுள்ளார்.

குழந்தைகள் இலக்கிய முன்னோடி, பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல் என்று சில அமைப்புகள் இவரைப் பாராட்டிப் போற்றியுள்ளனர்.

1982இல் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தினால் ‘தமிழ்ப் பேரவைச் செம்மல்’ என்று விருது அளிக்கப்பட்டும் பாராட்டப்பட்டார்.

பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சைத் தொடும் இலக்கியங்கள் என்றைக்கும் உலகத்தில் மகிழ்ச்சியை விஞ்ச வைக்கும். இது உண்மை.

அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%85%E0%AE%B4._%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE_%E0%AE%95%E0%AF%81%E0%AE%B4%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%88_%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%A4%E0%AF%81

அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது என்பது தமிழ்நாட்டிலுள்ள திரு இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்கென நிறுவிய பணிப்புலமான தமிழ்ப்பேராயம் என்பதன் வழியாக அளிக்கப்படும் தமிழ்ப் பேராய விருதுகளில் ஒன்றாகும். கதை, கவிதை, நாடகம் போன்ற குழந்தை இலக்கியப் படைப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு வெளியான சிறந்த நூல்களில் ஒன்றைத் தேர்வு செய்து, அந்நூலின் நூலாசிரியர் விருதுக்குரியவராகத் தேர்வு செய்யப்படுவார். இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்படுபவருக்கு இந்திய மதிப்பில் ரூபாய் 1,50,000 பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் அளிக்கப்படுகின்றன. இவ்விருது அழ. வள்ளியப்பா அவர்களின் நினைவாக அவரது பெயரில் வழங்கப்படுகிறது.

விருது பெற்ற நூல்கள்

ஆண்டு	நூலின் பெயர்	நூலாசிரியர்	நூல் வெளியீடு	குறிப்புகள்
2012	---	---	---	தேர்வு செய்யப்படவில்லை

2013	1. அமேசான் காடுகளும் சகாரா பாலைவனமும் எப்படித் தோன்றின? 2. குட்டி யானையும் சுட்டிகளும் 3. உங்கள் சுட்டிக் குழந்தைகளுக்குச் சுவையான குட்டிக் கதைகள் -75	1. பெ. கருணாகரன் 2. கொ. மா. கோதண்டம் 3. கமலா கந்தசாமி		பரிசுத் தொகை ரூபாய் 1, 50,000 மூவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
2023[2][3]	1. பெரிய தாத்தா 2.கடலுக்கு அடியில் மர்மம்	1. அருண்.மோ 2. சி. சரிதா		பரிசுப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

https://ta.wikisource.org/wiki/%E0%AE%AA%E0%AE%95%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81:%E0%AE%95%E0%AF%81%E0%AE%B4%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%88%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%85%E0%AE%B4._%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BE

"குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா" பகுப்பிலுள்ள பக்கங்கள்

இந்தப்பகுப்பின் கீழ் உள்ள 12 பக்கங்களில் பின்வரும் 12 பக்கங்களும் உள்ளன.

அ

- ஆசிரியர்:குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

ஈ

- ஈசாப் கதைப் பாடல்கள்

க

- கதை சொன்னவர் கதை
- கதை சொன்னவர் கதை 2
- குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள்-தொகுதி 1

ச

- சின்னஞ்சிறு பாடல்கள்
- அட்டவணை:சோனாவின் பயணம்.pdf

ந

- நல்ல நண்பர்கள்
- நான்கு நண்பர்கள்

ம

- மலரும் உள்ளம்-1

வ

- அட்டவணை:வித்தைப் பாம்பு.pdf
- வெளிநாட்டு விடுகதைகள்

https://kalkionline.com/magazines/gokulam/the-child-poet-who-was-happy-to-interact-with-children-as-a-child-valliyappa

குழந்தைகளோடு குழந்தையாய் பழகி மகிழ்ந்த குழந்தைக் கவிஞர்

அழ.வள்ளியப்பா!



அழ.வள்ளியப்பா அவர்கள், புகழ் பெற்ற கவிஞராக இருந்தாலும் வங்கியில் உயர் பதவியில் பணியாற்றினாலும் எந்தவிதமான

ஆர்ப்பாட்டமும் இன்றி குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாய் பழகி மகிழ்வார். அவருடைய வீட்டில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் அக்கம் பக்கத்துக் குழந்தைகள் கூடி விடுவார்கள். காரணம் வள்ளியப்பா குழந்தைகளுக்கு அன்று தன் வீட்டில் கதைகளைச் சொல்லுவார். இப்படியாக ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று கதை கேட்பதற்காக வந்த ஒரு சிறுவனுக்குப் பிறந்தநாள். பிறந்தநாள் அன்று அந்த சிறுவன் புதிய உடை அணிந்து வந்திருந்தான். அந்த சிறுவனுக்கு அன்று பிறந்த நாள் என்பதை அறிந்த ஒரு சிறுமி அவனிடம் "நீ ஞாயிற்றுக்கிழமை பிறந்தாய். நான் வெள்ளிக்கிழமை பிறந்தேன்" என்றாள். உடனே அருகில் இருந்த மற்றொரு சிறுவன் "நான் புதன்கிழமை பிறந்தேன்" என்றான். குழந்தைகளின் இந்த உரையாடலை கவனித்துக் கொண்டிருந்த வள்ளியப்பா அப்பொழுதே ஒரு பாடலை இயற்றிப்பாடினார்.

ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை

நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்

திங்கட்கிழமை பிறந்த பிள்ளை

தினமும் உண்மை பேசிடுமாம்

செவ்வாய்க்கிழமை பிறந்த பிள்ளை

செய்வதை ஒழுங்காய்ச் செய்திடுமாம்

புதன்கிழமை பிறந்த பிள்ளை

பெற்றோர் சொல்படி நடந்திடுமாம்

வியாழக்கிழமை பிறந்த பிள்ளை

மிகவும் பொறுமை காட்டிடுமாம்

வெள்ளிக்கிழமை பிறந்த பிள்ளை

வேண்டும் உதவிகள் செய்திடுமாம்

சனிக்கிழமை பிறந்த பிள்ளை

சாந்தமாக இருந்திடுமாம்

இந்தக் கிழமை ஏழுக்குள்

எந்தக் கிழமை நீ பிறந்தாய் ?

வள்ளியப்பா காரைக்குடியில் வசித்தபோது அவர் வீட்டிற்கு எதிர்வீட்டில் இருந்த சிறுவன் அண்ணாமலை வள்ளியப்பாவின் வீட்டிற்கு வந்து அங்குள்ள சிறுவர்களுடன் இணைந்து விளையாடி மகிழ்வான். அண்ணாமலையைக் கண்டவுடன் மற்ற குழந்தைகள் "அண்ணாமலை அண்ணாமலை அண்ணாந்து பார்த்தால் ஒண்ணுமில்லை" என்று பாடி அவனை கேலி செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதை கவனித்து வந்த வள்ளியப்பா ஒருநாள் குழந்தைகளிடம் "அண்ணாந்து பார்த்தால் ஒண்ணுமில்லையா ?" என்று கேட்டார். தொடர்ந்து

அண்ணாமலை அண்ணாமலை

அண்ணாந்து பார்த்தான்

ஆடி ஆடிப் பறக்கும் பட்டம்

அண்ணாந்து பார்த்தான் .

என்று தொடங்கி அண்ணாமலை முன்னாலே என்ன பார்த்தான் பின்னாலே என்ன பார்த்தான் என்று விவரித்து ஒரு பாடலை இயற்றினார். அந்த பாடலை வள்ளியப்பா ஒரு முறை குழந்தைகளிடம் பாடிக்காட்ட, அவர்கள் அதைத் திருப்பிப் பாடத் தொடங்கிவிட்டார்கள். நாளடைவில் 'அண்ணாமலை அண்ணாமலை அண்ணாந்து பார்த்தால் ஒண்ணுமில்லை' என்ற அவர்களுடைய பழைய வரிகளை அவர்கள் மறந்தே போய்விட்டார்கள்.

எதையும் கூர்ந்து கவனிப்பவர் அழ.வள்ளியப்பா. குழந்தைகளின் மனதில் நல்லவற்றை விதைக்க வேண்டும்; நேர்மறை எண்ணங்களை உருவாக்க வேண்டும் என்று விரும்பியவர். ஒரு நல்ல பாடல் குழந்தைகளின் மனதில் பதிந்து விட்டால் அது அவர்களின் எண்ணத்தை நேர்மறையாக்கும் என்பதற்கு இந்த நிகழ்ச்சிகள் சிறந்த உதாரணங்களாகும்.

D-%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%B4-%E0%AE%B5%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3/

முனைவர் சி.அங்கயற்கண்ணி
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறை
சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி
ஈரோடு.

குழந்தையை ஒரு செல்வமாகக் கருதுவது தமிழகத்தின் பண்பு. தம் மக்களே தமது பொருள் என்ற உயரிய எண்ணம் இந்த மண்ணின் ஆழப்பதிந்துள்ளது. அத்தகைய குழந்தைகளுக்கு அறிவையும், துணிவையும், அழகிய பண்புகளையும் இளமையில் எளிதாகக் கற்றுத் தருவது குழந்தை இலக்கியமாகும். குழந்தைப் பாடல்கள் வளர்ந்து வரும் படைப்பிலக்கியத் துறையாகும்.குழந்தைகளுக்குத் தொண்டு செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா. **"குழந்தை இலக்கியக் கோட்டை"** என்று அழைக்கப்படுகிற புதுக்கோட்டைக்கு அருகேயுள்ள இராயவரம் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இராமச்சந்திரபுரத்தில் உள்ள ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார். இப்பள்ளியில் படித்த காலத்தில் தான் அவரது முதல் பாடல் பிறந்தது. குழந்தைக் கவிஞராக நாளை தோன்றப் போவதை, முன்கூட்டியே அறிவித்த நிகழ்ச்சி இந்தப் பள்ளிப் பருவத்தில்தான் நடந்தது.

இராமச்சந்திரப்புரத்தில் முகாமிட்டிருந்த ஒரு டூரிங்க சினிமா கொட்டைகையின் விளம்பரம் "Lost Jungle" என்னும் ஆங்கிலப் பாடலின் பெயரை, "காணாத காடு" என்று தமிழிலும் பெரிய எழுத்தில் அச்சிட்டிருந்தனர். சிறுவன் வள்ளியப்பா "காணாத காடு கண்டுவிட்டால் ஓடு" என்று உரக்கப் பாடிக் கொண்டே ஓடினாள்.

"காணாத காடு

கண்டு விட்டால் ஓடு

எளிய இடம் தேடு

ஏழைகள் படுவதோ அரும்பாட

டிக்கெட் விளையோ பெரும்பாடு"

இதுதான் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவின் முதல் பாடல்.சென்னைக்குச் சென்று வள்ளியப்பா தி.ஜ.ர. முதலிய எழுத்தாளர்களைச் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. தி.ஜ.ர. தூண்டுதலினாலும் துணையாலும் எழுத்தாளரானார். "ஆளுக்குப்பாதி" எனும் முதல் கதையை எழுதினார். பின்னர் சிறந்த எழுத்தாளரானார். வள்ளியப்பாவின் சில கட்டுரைத் தொகுப்புகள் "வாழ்க்கை விநோதம்" என்னும் நூலாக வெளிவந்தன. இந்தக் கட்டுரைகள் எளிய, இனிய நடையில் எழுதப்பெற்றன. பின்னாளில் சிலவற்றைப் பாலர் மலர் என்னும் சிறுவர் இதழில் வெளியிட்டார்.வள்ளியப்பா திருமணத்துக்குப் பின்னர் இந்தியன் வங்கிப் பணியில் சேர்ந்தார். வங்கி நிகழ்வுகள், தமிழுக்கு மாறிய போது வங்கி இயலின் கலைச் சொற்களுக்கும் சரியான தமிழ்ச் சொற்களைத் தந்து புகழ் பெற்றார். தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், இவரை டிரஸ்டின், குழந்தை இலக்கியச் சிறப்பு, அலுவலராக நியமித்துக் கொண்டது. இதனால் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழியின் சிறுவர் இலக்கியம் பயன்பெற்றது. 1983-ல் "கோகுலம்" – சிறுவர் மாத இதழின் கௌரவ ஆசிரியராகத் திகழ்ந்தார்.**மலரும் உள்ளம்**1944 -இல் வள்ளியப்பாவின் முதல் நூல் முதல் கவிதைத் தொகுதி "**மலரும் உள்ளம்**" வெளிவந்தது. இந்நூலில் 23-பாடல்கள் இருந்தன. இதில் 25 படங்கள் இருந்தன. பத்தாண்டுகள் கழித்து 1954-இல் மேலும் பல பாடல்கள் சேர்த்து 135 பாடல்கள் பெரிய தொகுதியை வெளியிட்டாh. அதற்கும் "மலரும் உள்ளம்" என்றே பெயரிட்டார். 1961-ல் 118 புதிய பாடல்கள் கொண்ட மற்றொரு தொகுதியை என்னும் பெயரில் வெளியிட்டார். 1986-இல் மேலும் 110 பாடல்கள் கொண்ட தொகுதியை வெளியிட்டார். "சிரிக்கும் பூக்கள்" என்னும் பெயரில் வெளிவந்தது. தொடர்ந்து "விடுகதைப் பாடல்கள்" என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார்.ஈசாப் கதைப் பாடல்கள், வெளிநாட்டு விடுகதைகள், நேரு தந்த பொம்மை ஆகிய நூல்களும் "பாடடிலே காந்தி கதை" என்னும் சிறுவர் காப்பமும் வெளிவந்தது. "மலரும் உள்ளம்" எனனும் நூலுக்கு கவிமணி வாழ்த்துப் பாக்களை வழங்கிச் சிறப்பித்தார். இன்நூலுக்கு ரா.பி.சேதுபிள்ளை அணிந்துரை வழங்கியுள்ளார்."நல்ல கற்பனையும் சிறந்த உணர்ச்சிகளும், உயர்ந்த நோக்கங்களும், குழந்தைகளின் மனத்தில் பதியுமாறு பதியுமாறு பல பாடல்களைத் தொகுத்துத் தந்துள்ளார்"- என டாக்டர் மு.வ. அவர்கள் மலரும் உள்ளம் இரண்டாம் தொகுதியில் பாராட்டியுள்ளார்.சிலம்பொலி செல்லப்பன் "**சிரிக்கும் பூக்கள்**" என்னும் அணிந்துரையில் "படிக்கப் படிக்க நெஞ்சில் சுவையேற்றும் மாத்தொகுப்பே இந்நூல்" என்று போற்றுகிறார்.குழந்தைப் பாடல்கள் எளிமை, இனிமை, தெளிவு ஆகிய மூன்று பண்புகள் பெற்றிருக்க

வேண்டும். வள்ளியப்பாவின் பாடல்களில் இம்மூன்றும் பண்புகளும் காணப்படுகின்றன. பாடலின் சொற்கள் பெரும்பாலும் சீர்சீராக வரும்.'**லட்டும் தட்டும்**' என்றும் பாடலைப் பெரும்பாலான குழந்தைகள் அபிநயத்தோடு பாடுவதை நாம் பார்க்கலாம்.

"வட்டமான தட்டு

தட்டு நிறைய லட்டு

லட்டு மொத்தம் எட்டு

எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதி கிட்டு

பட்டு நான்கு லட்டு

மொத்தம் தீர்ந்த தெட்டு

மீதம் காலித்தட்டு"

இந்த பாடலில் சிறுவர்கள் லட்டை சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் சிறப்பைப் பார்க்கலாம். இந்த ஓசைப் பாடல் எனக்கு அதிகம் வேண்டும் என்னும் ஆசையை குழந்தைகளுக்கு ஏற்படாமல் இருப்பதை காட்டுகிறது.

"அணிலே அணிலே ஓடிவா

அழகு அணிலே ஓடிவா

கொய்யா மரம் ஏறிவா

குண்டு பழமம் கொண்மு வா

..

கூடிக் கூடி இருவரும்

கோறித்துக் கொறித்துத் தின்னலாம்"

இந்தப் பாடலில் குழந்தைகள் பறவை, விலங்கு போன்ற உயிர்களை நேசிக்கும் தன்மையும், பகிர்ந்து உண்ணும் பண்பும் விளக்கப்பட்டு இருக்கின்றது.கிரேக்க ஞானி ஈசாப்பை அறியாத சிறுவரோ, பெரியோரோ இருக்க முடியாது. ஈசாப் கதைகளைக் குழந்தைகளுக்குக் கூற விரும்பிய குழந்தைக் கவிஞர் அவற்றைப்

பாடல்களாகத் தந்தார். எளிமையாகவும், பாடல் வடிவிலும் தந்திருக்கிறார். .

“உணவுக்காகத் தொடர்ந்து சென்ற

எனது ஓட்டத்தால்,

உயிரைக் காக்க ஓடும் முயலை

வெல்ல முடியுமோ?”

என்னும் இந்தப்பாடல் ‘வித்தியாசம்’ என்னும் கதைப் பாடலாகும். இதில் வேட்டை நாய்க்கும், முயலுக்கும் உள்ள வேறுபாட்டை பாடலாகத் தந்துள்ளார்.தொல்காப்பியர் சொல்லும் ‘பிசி’ என்பது விடுகதையாகும். கவிஞர் 155 பல நாட்டு விடுகதைகளை, விடுகதையின் மரபப்படி பாடல்களாக்கிக் கொடுத்துள்ளார். அந்த நூலின் பெயர் ‘வெளிநாட்டு விடுகதைகள்’.

“கூரை வீட்டைப் பிரித்தால்

ஓட்டு வீடு

ஓட்டு வீட்டைப் பிரித்தா

வெள்ளை மாளிகை

வெள்ளை மாளிகைக்கு

உள்ள குளம்”

இது போர்ச்சுகலின் விடுகதை வள்ளியப்பாவின் பாடல்களில் மிகுந்த புகழ் பெற்ற பாடல் வரிகள்,

“ஏடு தூக்கிப் பள்ளியில்

இன்று பயிலும் சிறுவரே

நாடு பயிலும் தலைவராய்

நாளை விளங்கப் போகிறார்!”

சிறுவர்களை உயர்ந்த உதவும் பாடல்கள் முக்கிய இடம் பெறுகின்றன.**கதைகள்** குழந்தை இலக்கியத்தின் முக்கிய கூறு கதை, சிறுகதையும் இதில் அடங்கும். 1949 ஆம் ஆண்டு

வள்ளியப்பாவின் முதல்கதை பாட்டிக்குப் போட்டி வெளிவந்தது. ‘குதிரை சவாரி’ ரோஜாச் செடி, நெடுங்கதையும் சிறுவர்களுக்கான பெரிய அளவு நூலாக வண்ணப்படங்களுடன் வெளிவந்தன. ‘பொன்னனின் சுதந்திரம்’ என்னும் சிறுகதை ‘எது சுதந்திரம்?’ என்தைச் சுவையாக விளக்குகிறது. ‘வேட்டை நாய்’ என்னும் பிறமொழிக்கதைகள் அடங்கிய ஒரு சிறுகதைத் தொகுதியும் படைத்துள்ளார்.கவிஞர் நகைச்சுவையாக ‘அண்டப்புளுகன்’ என்னும் கதையை பாலர் மலரில் – கோமாளி என்னும் புனைப் பெயரில் எழுதினார். பின்னர் இது நூலாக வெளிவந்தது. ‘பர்மாரமணி’ ஒரு சிறுவனின் துன்பக் கதையைச் சொல்வது. ‘நீலா மாலா’ தொடர் கதையாக கோகுலத்தில் வெளிவந்து பின்னர் நூலாகப் புகழ் பெற்றது. கவிஞர் மணிக்குமணி என்னும் ஒரு நாவலை எழுதி உள்ளார். தினமணிக் கதிரில் வெளிவந்தது. இந்த மூன்று நாவல்களும் சிறுவர் நாவல் உலகின் மும்மணிகளாகப் போற்றப்படுகின்றன.கவிஞர் ஆங்கில மொழியை நன்கு அறிந்தவர். பல ஆங்கிலக் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு கதைகள் அனைத்தும் ‘வேட்டைநாய்’ என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்தன. ‘Tales for All times’ என்னும் தலைப்பில் தமிழில் மொழிப் பெயர்த்தார். கவிஞர் நாடகங்களையும் எழுதியுள்ளார். ‘வெற்றிக்கு வழி’ என்னும் நாடகம் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார். பூஞ்சோலை, கோகுலம் இதழுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார்.பல்வேறு அறிஞர்களின் வாழ்க்கையில் இருந்து சிறுவர்களுக்கு வழிகாட்டும் சுவையூட்டும் சிறந்த சம்பவங்களைத் தனியே தேர்ந்தெடுத்து சிறுசிறு கட்டுரைகளாக எழுதி வந்தார். சின்னஞ்சிறு வயதில், பெரியோர் வாழ்விலே சில பள்ளியில் பாட புத்தகங்களாக வைக்கப்பட்டன. இலங்கை, பர்மா, மலேசியா போன்ற அயல்நாடுகளிலும் இதுபோன்ற நூல்கள் பாடபுத்தகங்களாக வைக்கும் அங்கீகாரத்தைப் பெற்றன.‘நேருவும் குழந்தைகளும்; என்னும் நூல் அருமையான நூல். காவேரி, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்ரத, நருமதை, பாலாறு முதலிய தென்னிந்திய நதிகள் பற்றி ‘நம் நதிகள்’ என்னும் தலைப்பில் வள்ளியப்பா மிகச் சிறப்பான முறையில் நூல் ஒன்றை எழுதியுள்ளார். ‘மிருகங்கள் பேசினால்’ என்னும் அறிவியல் நூலை குழந்தைகளுக்காக படைத்துள்ளார்.வள்ளியப்பா குழந்தை எழுத்தாளர் சங்கத்திலும் பல சாதனைகளைப் புரிந்தார்.1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஒன்பதாம் நாளில் மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம் அவருக்கு ‘தமிழ்ப் பேரவைச் செம்மல்’ என்ற பட்டத்தை கொடுத்து சிறப்பித்தது.குழந்தை இலக்கியத்தைப்

பல்கலைக்கழக அளவில் ஒரு பாடமாக வைக்க வேண்டும் என்று கூறியவர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

காணொளிகள்

01] குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நூற்றாண்டு நிறைவு விழா
https://www.youtube.com/watch?v=Bx4c8WIj20U [1:21:18]

02] பாடல்கள் :அழ. வள்ளியப்பா
https://www.youtube.com/watch?v=fG4sPCRyma4 [31:52]

03] குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா (உரை: என். சொக்கன்)
https://www.youtube.com/watch?v=vzV-Aq0twP8 [1:09:13]

04] தமிழ் | அழ. வள்ளியப்பா பாடல்கள்
https://www.youtube.com/watch?v=el_ty54dJQQ [53:18]

05] குழந்தைக் கவிஞர் "அழ.வள்ளியப்பா நூற்றாண்டு விழா" | சிறப்பு நேரலை
https://www.youtube.com/watch?v=3a8be6UKuwk [3:53:15]

(😊)(😊) அழ வள்ளியப்பா (😊)(😊)









இந்திய இலக்கியச் சிற்பிகள்

அழ.வள்ளியப்பா

